Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணு 1

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI,
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Djrection:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்.—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ஹூ புரட்டாசி-மீ கஉ உ (27—9—34) } No. 44.

திருமந்திரம்

உந்திக் கமலத் துதித்தெழுஞ் சோதியை
யந்திக்கு மந்திர மாரு மறிகிலா
ரந்திக்கு மந்திர மாரு மறிந்தபின்
றந்தைக்கு முன்னே மகன்பிறந் தானே.

ஊதிய மேது மறியா ருரைப்பினு
மோதியு மேது மறியாத வூமர்க
ளாதியு மந்தமு மந்திக்க வல்லிரேல்
வேதிய னங்கே வெளிப்படுந் தானே.

உணர்விந்து சோணி யுறவினன் விசம்
புணர்விந்து வீசங் கதிரிற் குறையி
லுணர்வு முடம்பு முவையொக்க நிற்கி
லுணர்வு முடம்பு மொருகால் விடாவே.

நடமிரண் டொன்றே நளினம தாகு
நடமிரண் டொன்றே நமன்செயுங் கூத்து
நடமிரண் டொன்றே நகைசெயு மந்திர
நடஞ்சிவ லிங்க நலஞ்செம்பு பொன்னே.

செம்புபொன் னாகுஞ் சிவாய நமவென்னிற்
செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ்
செம்புபொன் னாகும் ஸ்ரீயுங் கிரீயுமெனச்
செம்புபொன் னான திருவம் பலமே.

பொன்னான மந்திரம் புகலவு மொண்ணாது
பொன்னான மந்திரம் பொறிகிஞ்சு கத்தாகும்
பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கிற்
பொன்னாகும் வல்லார்க் குடம்புபொற் பாதமே.

உ

திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்)

வித்தகம்

புதுவை.

பவ-ஞு புரட்டாசி-மீ 12உ

சங்கச் சான்றோர் நூல்கள்

பண்டைக் காலத் தமிழ்ச் சங்கமருவிய நூல்கள் சங்கச் சான்றோர் நூல்கள் எனப்படும். அவற்றுள் இப்பொழுது வழக்கில் உள்ளன தொல்காப்பியம் எட்டுத்தொகை பத்துப்பாட்டு பரிபாடல் பதினெண் கீழ்க் கணக்கு முதலியனவாம். இந் நூல்கள் மிகப் பழமையானவை யாதலால் இவற்றுள் இடையிடையே சில முக்கியமான கருத்துக்கள்—வேத உண்மைகள் கற்பனை ரூபமாகக் காணப்படுகின்றன. இக் கற்பனைகள் எல்லாம் உண்மையைத் தமக்குள்ளே பெருந்தன்மையாக மறைத்துக்கொண்டு அதனைக் காட்டாமல் காட்டிப் பெருமைப் படுத்துகின்றன. இப் பெற்றியானது இந் நூல்களை இயற்றியோரது மதிப்பொளிவை நன்கு விளக்கிக் காட்டுகின்றது. அன்னார் குறுகிய நோக்கம் உடையவர் அல்லர் என்பதும் வெள்ளிடையாகின்றது. இக் கற்பனைகள் தாம் நிறை முறையோடு கூடிய உண்மைக் கற்பனைகள் என்று கூறற்பாலன. ஏனைய பிற்காலத்து வித்துவான்கள் இயற்றிய நூல்களில் உள்ள கற்பனைகளுள்ளே பெரும்பாலன பொருத்தமில்லாதனவாய் ஆபாசத்தன்மை அடைந்தமையால் நிறை முறை இல்லாப் பொய்க் கற்பனைகள் என்றே கூறற்பாலன. உண்மையை ஒளிமறைவின்றிக் கூறுவன சங்க நூல்களே. இவற்றை யாத்தவர் கள்ளம் கபடு அற்றவர் என்பதில் ஐயமில்லை. ஆதலாற்றான் இந் நூல்களில் தமிழ் மணம் ததும்புகின்றது. தமிழ் அன்னை இந் நூல்களில் காணப்படுகின்றாள். இப் புலவர்களது மாசற்ற தன்மையையும் மனத் தெளிவையும் என்னென்று கூறுவது! இந் நூல்களை முறையாக ஆராயுங்கால் எவ்வளவோ உண்மைகள் காணப்படும். உதாரணமாக ஒரு சில ஈண்டு காட்டி ஒருவாறு விளக்கப்படும்.

தொல்காப்பியம் அரிய பெரிய மறைகளைத் தன்னுட் பொதிந்த ஒத்துக்கள் நிறைந்த காப்பியமாகிக் கவினுகின்றது. இந் நூலாசிரியர் பிற்கால வித்துவான்களினும் எத்துணையோ மடங்கு மதிப்பொளியிற் சிறந்தவர் என்பது இவர் இயற்றிய இந் நூலால் நன்று புலனாகின்றது. உயிர் மெய் எழுத்துக்களின் இலக்கணம் உடலுயிர்ச் சம்பந்தத்தையும் சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் என்பனவற்றின் சென்ன நிலையாகிய வியாப்பிய நிலையையும் வியாபக நிலையையும் நன்கு புலப்படுத்துகின்றது. வேதாந்த சித்தாந்த உண்மையைத் தமிழ் இலக்கணமே நன்று தெரிவிக்கின்றது. இவ் வுண்மைகளை அநுபவமாக உணர்ந்த தத்துவப் பெரியாரும் சித்தர் பெருமானுமாகிய அகத்தியரே தமிழ் இலக்கணம் தெளிவுற வகுத்தவராவர். தொல்காப்பியர் முற்றும் உணர்ந்த தத்துவப் பெரியாரல்லர் ஆயினும் இவ் வுண்மைகளைத் தாம் அறிந்த மட்டில் சிலவகையான் விளக்கி, எழுத்துக்களின் பிறப்பிலக்கணத்தைப் பூரணமாக அறிந்து உணர்த்துதல் தம்மால் முடியாது என்பதனைப் பின்வரும் சூத்திரத்தால் வெளிப்படையாகக் கூறி விலகிக்கொண்டனர்:

"எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே
யஃதிவணு வலாது எழுந்து புறத்திசைக்
[க்கும்
மெய்தெரி வளியிசை யளவு நுவன்றி
[சினே."

(ஷை—எழுத்ததிகாரம் சூத். 102.)

இதன் பொருள் அமயம் நேர்ந்துழி விரித்து விளக்கப்படும். எழுத்துக்களுக்கெல்லாம் பிறப்பிடமாயுள்ள மகாரப் பெட்டை நன்குணர்ந்த தத்துவப் பெரியாரே எழுத்துக்களின் பிறப்பிலக்கணத்தைப் பூரணமாக அறிந்து கூற வல்லராவர். இதுபற்றியே "அந்தணர் மறைத்தே" என்றனர் தொல்காப்பியர். அந்தணரால் அறியப்படும் மகத்தான மறையாகிய மகாரப் பெட்டை உணர்தலின் கண்ணதேயாகும் என்பது இதன் பொருளாகும்.

"மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்."
(ஷை-சூத்-15.)

"மெய்யி னியக்க மகரமொடு சிவணும்."
(ஷை-சூத்-46)

இவற்றால் உயிரோடு கூடியிருத்தலே மெய்யின் இயற்கை என்னும் உண்மை விளக்கப்பட்டது. உயிரோடு கூடியதே மெய் எனப்படுவது.

"மெய்யி னளபே யரையென மொழிப."
(ஷை-சூத். 11)

என்பதனுல் மெய்க்கு இயற்கையாகவே இயக்கம் உண்டு என்பதும் அது தாமத இயக்கம் என்பதும் கூறப்பட்டன. உயிரின் இயக்கம் துரித இயக்கம்—அதிக நிறைகொண்ட இயக்கம் எனப்படும். சொல்லுக்கு ஒத்ததே பொருளுக்கும் ஆம். ஆதலின் மெய்யின் இயக்கம் சத்தசைவு—சத்தோலி எனப்படும். உயிரின் இயக்கம் சித்தசைவு—சித்தோலி எனப்படும். இவை அந்நியோந்நிய சம்பந்தம் உடையன. இவற்றின் அசைவு நிறை சமம் பெறுதலாற்றுன் மெய்ம்மை ஆகிய நித்தியத்துவம் ஏற்படுகிறது; உடலுக்கு மெய் என்னும் பெயர் நன்று வலியுறுகின்றது.

"அரை யளபு குறுகன் மகரமுடைத்தே—
இசையிட னருகும் தெரியும் காலை."

"உட்பெறு புள்ளி யுருவாகும் மே."

(ஷை-சூத்-13, 14.)

"மெய்யின் வழியதுயிர்தோன்றுநிலையே."

(ஷை-சூத்-18.)

இவற்றுல் மகாரத் தியல்பும் அதனினின்றே உயிர்களும் மற்றைய மெய்களும் ஆக்கமுற்றமையும் கூறப்பட்டன.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்த
[னவே."

"மொழிப் பொருட் காரணம் விழிப்பத்
[தோன்ற."

(ஷை-சொல்லதிகாரம்.)

இவற்றுல் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பதும் சொல்லையும் பொருளையும் வாய்மையாக உணர்தல் தத்துவப் பெரியார்க்கேயன்றி ஏனையோர்க்கு முடியாத காரியம் என்பதும் நன்கு பெறப்படுகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரத்தால் அறமுதல் நாற்பொருளும் கூறப்பட்டன. முதல் கரு உரி என்பன பதி பசு பாசம் என்னும் மூன்றையுமே வாய்மையில் உணர்த்துவனவாகும். இவற்றின் உண்மையை உணர்தற்கு ஏற்ற கல்வியே வாய்மையான கல்வி என்க. இதுவே,

"வேண்டிய கல்வி ஆண்டு மூன்றிகவாது" என்பதனுற் கூறப்பட்டது-ஐந்திணை ஒழுக்கங்களால் உண்மையை உணர்தலே எவர்க்கும் வேண்டிய கல்வி என்க.: அறம் பொருள் இன்பம், பதி பசு பாசம், முதல் கரு உரி என்பன ஒன்றே என்க. ஐந்திணை என்பன ஐம்பூதங்களையே குறிப்பனவாகும். எம்பெருமான் திருவடி எனப்படும் பஞ்ச காரங்களாகிய பஞ்ச பூதங்களே—ஐந்திணைகளே யாவற்றுக்கும் ஆதி என்க. இதுபற்றியே இவை முதல் எனப்பட்டன.

"நிலமும் பொழுதும் என முதல் இரு
[வகைத்தே".

எனப்பட்டது. பௌதிகங்களின் நிறை பேதத்தால் உளவாவன கருப்பொருள்கள். இவற்றினின்றும் ஆக்கமுற்றனவே உரி எனப்பட்டன.

முதல் கரு உரி என்பனவற்றுள் நடுவணையாகிய கரு திருந்தவேண்டும்—திரியவேண்டும். கருத் திரிந்தால் முதலும் திரியும், உரியும் திரியும். பாசமே (உரி) ஞானமாய்—அருளாய்ப் பயன்படும் என்பதன உண்மை இதுவே என்க. "கருத் திருத்தி ஊன்புக்குக் கருணையினுல் ஆண்டு கொண்ட, திருத்துருத்தி மேயானை.." என்றது மாணிக்கம். (திருவாசகம், கண்டப் பத்து.)

அக ஒழுக்கம் (அகத்திணை) புற ஒழுக்கம் (புறத்திணை) களவு கற்பு என்பனவற்றின் இலக்கணத்தைக் கூறுவது வேதமன்ளே? ஒழுக்கம் என்றுல் பயில்வு எனப்படும். இப் பயில்வு அகம் புறம் என இருவகைத்து. பயில்வுதான் படி. ஏழு படி-ஏழு அணி—சப்த ஸ்தானம். (சப்திக்கும் ஸ்தானம்—ஒலிக்கும் ஸ்தானம் எனினும் ஆம்) அகப் பயில்வும் புறப் பயில்வும் ஒன்றுபட வேண்டும். ஒன்றுபட்டாலன்றி இயல் இல்லை, இசை இல்லை, கூத்து இல்லை—நாடகம் இல்லை. அகம் புறம் என்பனவே கீழ் மேல் எனப்படும். கீழ் ஏழு மேல் ஏழு எனப்படும். இவைதாம் பதினுலு உலகம்.

கைக்கிளை பெருந்திணைக்கு நடுவு நின்ற ஐந்திணை ஒழுக்கத்தினை மாத்திரம் ஆசிரியன் மாணவகனுக்கு இலக்கணமாகக் கூற ஆம். அவ் ஒழுக்கத்தினைச் சீடன் கைக்கொண்டு கிரமமாகப் பயிலுவானுயின், நடுவணதாகிய ஒழுக்கத்தில் அதுவே கொண்டு போய்ச் சேர்த்துவிடும். ஆதலால், நடுவணது ஒழியவே போதிக்க முடியும். இது பற்றியே,

"அவற்றுள்,
நடுவணைந்திணை நடுவணதொழியப்
படுதிரை வையம் பாத்தியபண்பே"

(ஷை-அகத்திணை இயல், சூத். ?.)

என்றனர் தொல்காப்பியர்.

வையம் பாத்திய பண்பு — உலகில் உள்ள பக்குவ ஆன்மாக்களுக்கு அவரவர் பக்குவங்களுக்கு ஏற்றவாறு வேறு வேருக உபதேசிக்கும் முறை என்க. "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" (புறத்திணை இயல், சூத் 75.) என்னும் சூத்திரத்தால் வாய்மையும் போலியுமாய் அமைந்த நால்வகை வருணத்து ஒழுக்கங்களும் யோக உறப்புக்களும் பொதுவான சாதகங்களும் கூறப்பட்டன. இவை அமயம் நேர்ந்துழி விரித்து விளக்கப்படும்.

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."

(ஷை—88.)

இச் சூத்திரத்தின் உண்மைப் பொருள் "பாச பதம்" என்னும் கட்டுரையில் (வித்தகம் இல. 37) கூறப்பட்டது. இதனுல் மெய்யடியார் இலக்கணமும் அவர் கடவுளர் போலப் போற்றப்படுதலும் கூறப்பட்டன. கந்தழியைப் பெறுதல் குருவருளால் ஆக வேண்டும் என்பது

"ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்றபெருவளம் பெருஅர்க் கறிவுறீஇச்
சென்றுபயனெதிரச் சொன்ன பக்கமும்"

(ஷை—சூத்—36.)

என்பதனுல் குறிக்கப்பட்டது.

"கற்பெனப் படுவது களவின் வழித்தே." என்பதனால் நித்தியத்துவம் பெறுதற்குரிய வாய்மையான கற்பின் இலக்கணமும் களவு என்னும் கந்தருவத்தாலன்றிக் கற்பு இல்லை என்பதும் கூறப்பட்டன.

"காமஞ்சான்ற கடைக்கோட்காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."

(தொ—கற்பியல்)

இதனால் உண்மைத் துறவிகளாகிய சிவன் முத்தர் இலக்கணம் கூறப்பட்டது. "காமஞ் சான்ற கடைக் கோட்காலை" என்பது காமம் முற்றுப் பெறுதலால் உளதாகும் காதல் கைவரப் பெற்றமையை உணர்த்திற்று. இக் காதலையே கந்தழியின் பேர் உரு என்றனர் பெரியார். "ஏமஞ் சான்ற மக்கள்" என்பது மாற்றிப் பிறந்தமையால் உளவாகும் பொன்மயமான உடலின் நிலையை உணர்த்திற்று. "புதல்வர் எனும்வமதது" என இருக்கு வேதம் (வித்தகம் இல 16-17, பக். 9 பார்க்க.) கூறியதும் அறிக. "அறம் புரி சுற்றம்" என்பது மறத்தன்மையுடைய கருவி கரணங்களும் மற்றைய முன்னிலைகளும் நித்தியத்துவ நெறியாகிய அற நெறிக்கண் நின்றமை கூறப்பட்டது. "கிழவனும் கிழத்தியும்" என்பது அன்பு மயமாய் அமலமடைந்து சத்தியும் சிவமுமாய் ஒழிவற ஒன்றிய உயிர் உடல்களை உணர்த்தி நின்றது. "சிறந்தது பயிற்றல்" என்பது சிவன் முத்திநிலை வாய்ந்து உலக குரவராய்ப் பக்குவான்மாக்களுக்கு உபதேசம் செய்து அவர்களை நெறிப்படுத்தி நிற்றலை உணர்த்திற்று. களவு கற்பு என்னும் வாய்மையான இல்லற ஒழுக்கத்தால் அம் பயன் இதுவே என்பது போதர "இறந்ததன் பயனே" என்று கூறப்பட்டது.

"உணர்ச்சி வாயில் உணர்வோர்வலித்தே"

"பொருட்குத் திரிபில்லை உணர்த்த
[வல்லின்"

(தொ—எச்சவியல்)

இவற்றால் திருவருட் சகாயத்தால் வாய்மையான உணர்ச்சி கைகூடுதலும் உணர்ச்சி பேதமேயன்றிப் பொருட் பேதம் இல்லை என்பதும் நன்று வலியுறுத்தப்பட்டன. குருட்டுப் பார்வையாகிய சுட்டுணர்விற்கு மாயையாகவும் ஞான உணர்ச்சியாகிய அபேத அமல உணர்ச்சிக்குப் பிரமமாகவும் தோன்றும் பொருள் ஒன்றே என்க.

வாய்மையான அந்தணர் இலக்கணமும் மறையின் இலக்கணமும் "அந்தணர் மறைத்தே" (எழுத்ததிகாரம்) என்பதனாலும், உலகச் சாதியாளராகிய அந்தணர் முதலியோர் இலக்கணமும் ஒழுக்கமும் பிறவும் மரபியலிலும் கூறப்பட்டன. இவ்வாறு தொல்காப்பியம் என்னும் மிகப் பழைய நூலில் மறை பொருளாகித் திகழும் உண்மைகள் பலவாகும். அவை யெல்லாம் அவகாசமாய் ஆழ்ந்து ஆராய்தற் பாலன. அமயம் நேரும் தோறும் இவ் வுண்மைகள் சிறிது சிறிதாக விளக்கிக் கூறப்படும்.

எட்டுத் தொகையுள் ஒன்றாகிய புறநானூற்றுச் செய்யுட்கள் பலவற்றால் அறியப்படும் வேத உண்மைகள் பலவாகும்.

புற நானூறு.

"உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே"

(தொ-செ 18)

என்பதனால் துல கல்பம் உண்டு பௌதிகத் தூய்மை அடைந்தவரே சாவா உடம்பு பெற்று நித்தியத்துவம் அடைவார் என்பது கூறப்பட்டது. இச் செய்யுட்பாகப் பொருள் முன்னும் பல கட்டுரைகளில் (வித்தகம்) விளக்கிக் கூறப்பட்டனவாதலின் ஈண்டும் விரித்தல் மிகையாம்.

"நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டி
னாறுணர்ந்த வொருமுதநூ

இகல்கண்டோர் மிகல்சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ
மூவேழ் துறையு முட்டின்று போகிய
வுரைசால் சிறப்பி னுரவோர் மருக
...."

(தொ-செ 166.)

இச் செய்யுளால் வாய்மையான அங்கங்களும் நான்மறையும் அவற்றை அடையும் நெறியும் உண்மைமுத்தியும் அதன் அருமை பெருமையும் கூறப்பட்டன.

முது முதல்வன் = சற்குரு நாதன். நன்றாய்ந்த நீள் நிமிர்சடை—சர்வஞ்ஞத்துவத்தை உணர்த்தி நின்றது. வாய் போகாது—வாயினால் கூறாது. ஒன்று புரிந்த ஈர் இரண்டின் ஒருமுது நூல்—(உரிய சாதகங்களால்) தான் அது ஆகச் செய்தலால் அறியப்படும் நான்மறை. "மறை நான்கே வான் சரடா" என்றது மாணிக்கம். (திருவாசகம், திருச்சாழல்) சரடு— நூல். இவ் உண்மை "நான் மறை" என்னும் கட்டுரையில் விரிவுற விளக்கப்பட்டது ஆங்குக் காண்க. (வித்தகம் இல 25.) ஆறு உணர்ந்த ஒரு முது நூல்—ஆறு அங்கங்களின் இரகசியங்களையும் அநுபவ முறையான் அறிந்து அநுட்டித்தலால் உணரப்படும் ஒரு முது நூல் என்பது. நூலை (உணர்ந்த) உரவோர் என முடிக்க. நூலை (உணர்ந்த) உரவோர்; உணர்ந்து கொளீஇப் போகிய உரவோர்; உரை சால் சிறப்பின் உரவோர் எனத் தனித்தனி இயையும். இகல் கண்டோர் மிகல் சாய்மார் மெய் அன்ன பொய் உணர்ந்து—பகைமை வினைக்குரிய காரணத்தைக் கற்பித்துக்கொண்டு அத்தீவினையைப் புரிந்து இடர் உறுத்தும் முன்னிலைக் கொரணிகளது மெய் போலத் தோன்றும் பொய்யை உணர்ந்து என்பது. பொய் பயனின்மை குறித்து நின்றது. பொய் ஓராது மெய்கொளீஇ—கற்பனைகளாகிய பொய்ம்மையை வாய்மை என நம்பி அவமாகாது அதற்கு அடிப்படையான சத்தியத்தையே கடைப்பிடித்து என்பது. மூவேழ்

துறை—படியேற்றத் துறை. இவை விரிப்பிற் பெருகும். அமயம் நேர்ந்துழி விரித்து விளக்கப்படும். இத்தன்மை வாய்க்கப் பெற்ற உரவோர் உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் பெறுதல் சொல்லாமலே அமைதலின் இச் செய்யுளால் உண்மை முத்தி நிலையும் கூறப்பட்டமை வெள்ளிடை மலையாம்.

யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்த
லினிதென மகிழ்ந்தன் றுமிலமே முனிவி
னின்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சி
[யிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.
(ஷை—செ. 192)

இவ் அரிய பெரிய செய்யுள் வேத உண்மைகளைத் தன்னகத்து அடக்கி மிளிர்கின்றது. பொருள் மிக விரியும். உலகியலை உணர்ந்து ஒப்புர ஒழுகுதலாகிய சகச நிட்டையை—நித்தியத்துவம் பெறுதற்குரிய இயற்கை நிலையை விளக்கமுற உணர்த்தி நின்றது. சீவர்களுக்கு இப்பெற்றி கைவரப் பெறுதல் அரிதினும் அரிதாம். தான் அது ஆம் தத்துவம் பெறுதற்கு இன்றியமையாச் சாதகம் இதுவே என்பது வேத உண்மை. பொருண்மொழிக் காஞ்சித் துறை அமைந்த இச் செய்யுள் "கஞ்சியில் வதிவோர் எல்லாம் காலாட்டி உண்பார் தாமே." என்னும் சித்தர் திருவாக்குக்கு இலக்கியமாகித் திகழும் மெய்யடியார் நீர்மையை உணர்த்தி நின்றது.

முன்னிலை தன்னிலை யாதல் ஒருவன் உஞற்ற வேண்டிய தவம் வேறில்லை என்பதும், இப் பெற்றி கைகூடப் பெற்றோர் நரை திரை மூப்புப் பிணியும் சாக்காடும் ஒழிந்து நித்தியத்துவம் பெறுவார் என்பதும் "யாண்டுபல வாக நரையில வாகுதல்" (ஷை-செ 191) என்னும் செய்யுளால் கூறப்பட்டன. இச் செய்யுளையும் அதன் விளக்கமான உரையையும் "வித்தகம் இல 16-17 பக். 9 இல்" காண்க.

கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகைக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் அரிய பெரிய வேத உண்மைகளை நிறை முறை அமைந்த கற்பனைகளால் கூறுகின்றது. "ஆறறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து" என்பதனால் பக்குவ சீவர்களுக்கு அஃதாவது தம்முள்ளே ஆறு அங்கங்களையும் கண்டு வேதங்களையும் உணர்ந்து அவற்றின் அந்தத்தையும் அணவத்தக்க (அடையத்தக்க) பக்குவமுடைய சீவர்களுக்கே அவரவர் சடபேதம் கர்மபேதங்களுக்கு ஏற்றவாறு எம்பெருமான் பல உபதேச மறைகளைக் கூறியருளுவான் என்னும் வேத உண்மை விளங்க வைக்கப்பட்டது. கொடுகொட்டி பண்டரங்கம் காபாலம் என்னும் இறைவன் நடனவகையையும் அவ் இறைவனைப் பிரியாத இறைவியின் இயல்பையும் இச் செய்யுள் கூறுகின்றது. இந் நடனங்களும் இறைவியின் செயலாகிய சீர் தூக்கு பாணி என்பனவும் அரிய மறைகளாகி அமைந்துள்ளன. சத்தசைவ சித்தசைவுகள் சமம் பெற்றபோதே இவற்றின் உண்மைகள் அநுபவமாக அறிதற்பாலன. "நிறை எனப்படுவது மறை; பிறர் அறியாமை" என்பதனால் "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகி நமது சரீரத்துள் மறையாய் இருப்பதே அமல நிறை என அதன் இலக்கணம் இந் நூலில் விளக்கப்பட்டது. ஏனைய உண்மைகள் அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படை அரிய பெரிய வேத உண்மைகளை அடக்கியுள்ளது. கந்தழியைப் பெறும் பக்குவமுடையவன் சற்குருநாதனை நாடி அடைந்து அவன் அருளால் அதனைப் பெறவேண்டும் என அறிவுறுத்தி அவன்பால் ஆற்றுப்படுத்துகின்றது. திருவடிப் பேறே கந்தழிப் பேறு என வற்புறுத்துகின்றது "மணங்கமழ் தெய்வத்து இளநலம்" அமையப் பெறுதலே கந்தழிப் பேற்றிற்கு அறிகுறி எனக் கூறுகின்றது. கந்தழி இலக்கணம் முன்னும் பல கட்டுரைகளில் கூறப்பட்டனவாதலின் ஈண்டும் விரித்தல் மிகை.

பொருநராற்றுப் படை

"..
தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅ
ததன்பய மெய்திய வளவை மான
...."
(ஷை—அடி 91.92)

என்பதனால் உடம்பு பிணமாகிக் கழிய இறந்துவிடாது அவ் உடம்பு நித்தியத்துவம் அடைதலாற்றான் அறமுதல் நாற்பொருட் பயனும் அடையப்படும் என்பதும் நன்று வலியுறுத்தப்பட்டமை கண்டு கொள்க. தவம் செய்யும் மாக்கள், அருந்தல் பொருந்தல்களாகிய வாய்மையான சாதக யோகங்களால், உடம்பைப் பிணமாகிக் கழியவிடாது, அதனை நித்தியத்துவம் அடையச்செய்தலால் அத்தவப்பயனை அடைந்த தன்மைபோல என்பது இவ் அடிகளின் பொருளாகும. மாக்கள் தவம் செய்தே மக்கள் ஆக வேண்டுமாதலின் தவஞ்செய் மாக்கள் என்றார். "மாக்கள் தாமே ஐயறிவுயிரே;" "மக்கள் தாமே ஆறறிவுயிரே." எனத் தொல்காப்பியம் (மரபியல்) கூறியதும் அறிக. உலகர் போல் வாழ்ந்து ஒப்புரவொழுகுதலே—முன்னிலைகளை நிறைநன்கு பஞ்சீகரணித்தலே மாக்கள் மக்களாகி நித்தியத்துவம் பெறுதற்குரிய வாய்மையான தவம் என்க.

விண்ணுலகம் உடம்போடு அடையப்படவேண்டியது அஃதாவது மாற்றிப் பிறந்த மெய்யடியார்க்கு இவ்வுலகமே பொன்னுலகமாக—சிவலோகமாக மாற்றமடையும் என்னும் வேத

உண்மையைப் பின்வரும் கம்ப ராமாயணச் செய்யுட்களும் நன்று புலப்படுத்துதல் கண்டு கொள்க:

கம்ப ராமாயணம்

"இடம்படு புகழ்ச்சனகர் கோனினிது [பேண
....
உடம்பொடு துறக்கநக குற்றவரை யொத் [தார்."
(ஷை-பாலகாண்டப் —கடிமணப்படலம் செ 1)

"இறைவன் சொல்லெனு மின்னற வருந் தினர் யாரும்
....
உறையும் விண்ணக முடலொடு மெய்தின [ரொத்தார்."
(ஷை-அயோத்யா காண்டம் மந்திரப் படலம், செ 75.)

["இன் நறவு அருந்தினர் யாரும்... ....உடலொடும் எய்தினர் ஒத்தார்" என்பது "காயத்துள் மெய்ஞ் ஞானக் கள்" என்னும் அமுதம் உண்டார் சாவா உடம்பு பெற்று நித்தியத்துவம் அடைவார் என்னும் வேத உண்மையை விளக்கி நிற்றலும் கண்டு கொள்க.]

மதுரைக் காஞ்சி

"..
உயர்நிலை யுலக மிவணின் றெய்தும்"
(ஷை-அடி 471.)

என்னும் . செய்யுள் அடியும் உடலை விட்டு உயிர் பிரியாது இவ்வுலகத்து நிலைபெறுதலாற்றான் (நித்தியத்துவம் பெறுதல்) பொன்னுலக வாழ்வு அடையப்படும் என்னும் உண்மையை வற்புறுத்துதல் கண்டு கொள்க.

பத்துப் பாட்டுள் மதுரைக் காஞ்சி என்னும் அரிய பெரிய அகவல் உலக நிலையாமையை நன்குணர்த்தி அத்தகைய அழிதன் மாலையவாகிய முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்து நித்தியத்துவம் அடையவேண்டும் என்னும் வேத உண்மையையே பல்லாற்றானும் நன்கு வற்புறுத்துகின்றது. இவ் அகவல் அடிகளுள்ளே ஒரு சில காட்டப்படுகின்றன:

அடி 456
"மாசு அறவிளங்கிய யாக்கையர்"

என்பது ஊனம் நீங்கிய ஒளிமயமான வடிவத்தை உணர்த்திற்று.

அடி 456-459
"...............................சூழ்சுடர்
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னுருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபி னுயர்பலி கொடுமார்"

"சூழ் சுடர் வாடாப் பூ" என்பது மணம் கமழ் தெய்வத்து இள நலம் அமைந்த பொற்பூவாகிய—பொன்மயமாகிய விமல தேகத்தை உணர்த்தி நின்றது. நாற்ற உணவு—ஊன் உணவு; அவி எனினும் ஆம்.

அடி 472
"அறநெறி பிழையா வன்புடை நெஞ்சிற் பெரியோர் மே எய......................"

இஃது அன்பினால் ஆவதே அறம் என்னும் வேத உண்மையை உணர்த்தி நின்றது. "அன்பும் அறனும் ஒழியாது காத்து" (ஷை அகவல் அடி 496.) எனப் பின்னும் கூறப்பட்டதறிக.

அடி 477—482
"சென்ற காலமும் வரூஉ மமயமு
மின்றிவட் டோன்றிய வொழுக்கமொடு [நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமுழு துணருஞ்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
யான்றடங் கறிஞர்......... ...."

இவ் அடிகள் முக்காலமும் உணர்ந்த ஓ வடிவினராகிய (சாவா உடம்பு) சிவன் முத்தர் இலக்கணம் கூறியமை கண்டு கொள்க.

அடி 496
"நன்றாய்ந் தீறுங்கண்டாய்த் தடங்கி"

என்பது உலகியல் நோக்கி ஒப்புரவொழுகுதலாகிய சகச நிட்டையை உணர்த்திற்று.

இவ்வாறு வருவன பல. மேலும் விரிப்பிற் பெருகும். இவற்றின் பொருளை அநுபவமாக அறிய வல்லவரே புகலிடம் அகலிடம் அறிய வல்லராவர். இவ் அகவற் பாக்களை இயற்றியோர் அறிவு விளக்கம் எத்துணைச் சிறப்புடையது என்பதனைத் தற்காலத்தவர் அறிய வல்லரோ? இத்துணை விளக்கம் உடையவராயிருந்தும் இன்னோரே மன இச்சையின் வசப்பட்டவராய் அவலம்பம் (கீழ் நிறைப் பொலிவு) பெற்று மாண்டு போயினர் என்றால் புகலிடம் அகலிடம் என்பனவற்றை அறிதலின் அருமையைக் கூறவும் வேண்டுமா? மரணத்தைக் கடந்து சாயா யாக்கை பெற்று முத்தியடைதல் என்றால் எளிதின்முடிவதாகுமா?

"அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ் [வகை
திறம்பட வருவன கீழ்க்கணக் காகும்"

என ஆன்றோர் கூறியவாற்றால் பதினென் கீழ்க்கணக்கு என்பதனுள் வாய்மையாக அடங்கிய நூல்கள் நாற்பொருட் பெற்றியை நன்று தெரிப்பனவாய் அமைந்துள்ளன என்பது பெறப்படுகின்றது. வாய்மையைக் கைக்கொண்டு ஒழுகுதற் குரிய நீதிகளே இந் நூல்களில் பரக்கக் காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்றாகக் கூறப்படும் தேவர் குறள் அரிய பெரிய வேத உண்மைகளே பொதியப் பெற்றதென்பது வெள்ளிடை. இந் நூல் உண்மைச் சைவக் கொள்கையையே பல்லாற்றானும் நன்று வலியுறுத்துகின்றது. இது வரை "வித்தக" வாயிலாக வெளிவந்த கட்டுரைகளில் இக் குறட்பாக்கள் பலவற்றின் உண்மைப் பொருள் நன்று விளக்கப்பட்டுள்ளன. அமயம் நேரும் தோறும் இந் நூற்செய்யுட்களும் பிறவும் இயைபு நோக்கி எடுத்துக்காட்டி விளக்கப்படும்.

மிகப் பழைய நூலாகிய பரிபாடல் என்பது அரிய பெரிய மறைகளைத் தன்னகத்துக்கொண்டு மிளிர்கின்றது.

"வேதத்து மறைநீ பூதத்து முதலு நீ"

என்னும் பரிபாடல் அடியானது நான் மறையின் இலக்கணத்தையும்

அவையே இறைவன் வடிவம் என்பதனையும் நன்று வலியுறுத்துகின்றது. (வித்தகம் இல 25 இல் "நான் மறை" என்னும் கட்டுரையை நோக்குக.") வேத வடிவாகிய உடலுள் மறையாய் இருப்பன நான்மறை. "வேதத்தின் ஒத்த உடல்" என்றார் திருமூலர்.

திருமந்திரம்

சித்தத்தினுள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தமமாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையு முண்ணின்ற வுற்பத்தி
அத்த னெனக்கிங் கருளாலளித்ததே.

(ஷை—திருமூலர் வரலாறு, செ 12.)

உடல் வேதம் எனப்படுமோ? எனின், படும் என்றே கூற ஆம். வதம் எனும் குற்றம்—குற்றம் எனும் அசுத்தம் மலிந்த வகரம் எனும் வாயுவினால் ஆக்கப்பட்டது இவ் உடம்பு. அவ்வாயுவினால் நிலை பெற்றிருப்பது இவ் உடம்பு. அவ் வாயு இன்மையால் அழிந்து படுவது—பிணமாகிக் கழிவது இவ் உடம்பு. காற்றடைந்த பை எனப்படுவது இவ் உடம்பு. காற்றுத் துருத்தி புலால் நாற்றம் எனும் குற்றமுடைய துருத்தி எனப்படுவது இவ் உடம்பு. ஆதலால் வேதத்தின் ஒத்த உடல் எனப்பட்டது. வான் என்னும் ஞானாகாசத்து நின்று பிரியாமல் பிரிந்து சரடென—நூல் என-இயற்கை அசைவு என நாலு அசைவுகளாகிய கலைகள் (சதுரம்—நாலு) உண்டாயின. இவையே சூக்குமமாகிய நான்கு பூதங்களின் கூறுபாடுமாம். ஆதலாற்றான் "வேதத்து மறைநீ பூதத்து முதலு நீ" எனப் பரிபாடல் கூறுவதாயிற்று என்க. வேதத்து மறையும் பூதத்து முதலுமாய் நிற்பது ஞானாகாச வடிவமாகிய பிரமமே என அறிதற்பாற்று.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த சங்கச் சான்றோர் நூல்களுள்ளே தலையாயது எனப் போற்றப்படும் தகைமை வாய்ந்த நூல் ஒன்று உள்ளது. அது தான்

மூவடி முப்பது

என்பது. இவ் அரிய பெரிய தமிழ் மறை இப்பொழுது அச்சுவாகனம் ஏறி வெளிவந்தது காலத்தின் பயன் என்றே கூறவேண்டியதாகின்றது. இந்நூலை அருளிய இடைக்காடர் சாமானியவரல்லர். இவரை மற்றைய புலவரோடு ஒருங்கு வைத்து எண்ணுதல் தகாது.

"தன் மதம் உணர்ந்தவரே புலவர்
அறிபொருளுக் கேனோர் புலவர்."

என்னும் பழமொழியின்படி இவர் "தன் மதம் உணர்ந்த புலவர்" என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. காரிகை கற்றுக் கவிபாடுவோரைப் புலவர் என்பது உலகியல். வாய்மையான புலவர் என்பார் யார்? எனின், அவர் தாம் தம் மதம் உணர்ந்தவரே யாவர். தம் மதம் உணர்தல் என்றால் என்னை?

"கடக்களிறேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றேனாக அவயவம் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்"

(திருவாசகம்–திருவண்டப் பகுதி.)

என மணிவாசக வள்ளல் அருளியவாறு தடப் பெரு மதம் என்னும் இந்து மதம் பெற்றவரே–இந்து மதத்தவரே தம் மதம் உணர்ந்த புலவர் ஆவர்—சதுரர் ஆவர். புலவர் என்பது தெய்வப் பெயராய் அமைந்தமையின் உண்மையையும் நோக்குக. இவர் சித்தியத்துவம் பெற்ற தத்துவப் பெரியாராகிய சித்த மூர்த்தியே என்பது வெள்ளிடை. "சங்கப்பலகையை நிலைகுலைத்த இடைக்காடர்" எனப் போற்றப்பட்டவர் இவரே என்றால், இவரது வாய்மையான கல்வித் திறனும் ஆற்றலும் அருமை பெருமையும் கல்வி இல்லாத அழுக்கு மனத்து எம்போலிகளால் இத்துணைய என இயம்ப ஒண்ணுமோ? ஏகாதசப் படியாகிய ஏறணியில் நின்று பயிலும் மெய்யடியார்களது பயில்வின் இலக்கணமும், ஈற்றுப் படியாகிய துவாதசாந்த அணியின் இயலும் இந்நூலில் விளக்கிக் கூறப்பட்டன என்பது எமது தாழ்மையான துணிபு. ஆதலால் நிம்ஆதாரங்களிலே நின்று உழலும் பெற்றியுடைய எம்போலிய ஏழை மதியுடைய மாக்கள் இந் நூலைப் பார்த்து "இது ஒரு விடுகதையோ? பித்தன் எவனோ ஒருவன் இதனை எழுதி விட்டனன் போலும்!" என உழறிக் குழறி "இது சுயமரியாதை அன்று" எனக் கூறி அவமதிப்பார்கள். இந் நூலில் அரிய பெரிய சூக்தங்களே மிளிர்கின்றன. மூன்று அடிகளையுடைய முப்பது சூத்திரங்களால் ஆய இந் நூல் "மூவடி முப்பது" எனப்பட்டது. நான்கு அடிகளான் ஆய நாற்பது செய்யுட்களை உடைய நூல் "நாலடி நாற்பது" எனப்பட்டதுபோல "தாயப்பனுவலின்மையின் மூவடி முப்பது முதலியன அழகின்பாற்படும்" என்று தொல்காப்பியச் செய்யுளியலில் உரைகாரர் கூறுதலால் இந் நூலின் பழைமை அறியப்படும். அநுபவம் சிறிது ஏற்ற பெற்றி அடைந்தாலன்றி இம் மறைப்பொருள் ஒரு சிறிதும் புலப்படாது. ஆதலாற்றான் இந் நூல் நெடுங்காலமாகவே அச்சுவாகனம் ஏறி வெளிவராமல் எம்போலிய ஒரு சில முட்டைகளால் புறக்கணித்து ஒதுக்கப்பட்டது.

திருவள்ளுவர் குறளுக்கு உரை காண்பது கடினம். ஔவை குறளுக்கோ எனின் அதனினும் சிறிது அதிக கடினம். அதனினும் மிக மிகக் கடினம் இம் மூவடி முப்பதுக்கு உரை காணல் என அறிதல் வேண்டும். திட்ப நுட்பஞ் செறிந்த முப்பது சூத்திரங்களால் ஆய இந் நூல் இன்பக் கூறு, பொருட்கூறு அறக்கூறு, ஒழிபு என்னும் நான்கு பாகுபாடுகளை உடையது. "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு" (தொல்காப்பியம் — பொருளதிகாரம் களவியல் சூத் 1.) என ஆசிரியர் தொல்காப்பியனார் இன்பத்தை முதற்கண் வைத்துக் கூறியதுபோல இந் நூல் ஆசிரியரும் முறையே இன்பக் கூற்றினை முன்னும் அதன் பின் பொருட் கூறு அறக்கூறுகளையும் அவற்றின் ஒழிபு என ஓர் இயலையும் வைத்து ஓதுவாராயினர். இவற்றுள் முதலாவதாகிய இன்பக் கூறு காமம், காமக்கிழத்தி, ஊன் மிசைதல், பொய்யுரை, நாணுமை என்னும் ஐந்து அதிகாரங்களை உடையது.

இரண்டாவதாகிய பொருட்கூறு கல்லாமை, புறப்போலிவு, வியத்தல், நேராநட்பு, குற்றங்காட்டல், நல்குரவு, கலக்கம், தூக்கம், பொச்சாப்பு, ஆசை என்னும் பத்து அதிகாரங்களை உடையது.

மூன்றாவதாகிய அறக் கூறு துறவறவிழிவு, கண்ணறுத்தல், ஈயாமை, கோடுமை, வெகுளி, போலிப் புறமொழி, கான்முளைப்பெருக்கம், கோலை, சூது, குடி என்னும் பத்து அதிகாரங்களை உடையது.

நான்காவதாகிய ஒழிபுக்கூறு தற்றுணை யாக்கம், பிணி, அழுகை மூப்பு, சாக்காடு, என்னும் ஐந்து அதிகாரங்களை உடையது.

ஒவ்வோர் அதிகாரமும் ஒவ்வோர் சூத்திரமாகவும் சூத்திரங்கள் ஒவ்வொன்றும் மும்மூன்று பிரிவுகளை உடையனவாகவும் அமைந்துள்ளன. பிரிவுகளாகிய ஒவ்வொரு சொற்றொடரும் "கடுகைத் துளைத்து எழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்" போன்றனவாய் அரிய பெரிய வேத உண்மைகளையே தம் அகத்துக் கொண்டு மிளிர்கின்றன. இவையெல்லாம் தத்துவப் பெரியாராகிய எமது இடைக்காடர் பெருமானது அநுபவத் திருவாக்குக்களாய் சமயக் கணக்கர் மதிவழி செல்லாது எல்லாச் சமயிகட்கும், சாதியாளர்கட்கும் பொதுவான உண்மைகளையே—ஈடேற்றத்துக்குரிய நெறிகளையே கூறுகின்றன; கடவுளுண்மையையும் வெறும் நம்பிக்கை வாயிலானன்றி அநுபவ முறையால் அறியும் திறனை அறிவுறுத்துகின்றன.

வேத நூல்கள் என உலகில் வழங்குவன இந் நூல் போன்றனவாகா. ஆகம புராண இதிகாசங்களும் அன்னவே. படியேற்றம் பெறவான் முயலவேண்டியவன் ஒருவன் தான் அநுட்டிக்க வேண்டியது இன்னது எனச் சுருக்கமாகக் காட்டுவது இந்நூல். புதை பொருள் சிறந்தோங்கும் அருமறை இது. சித்தர் பரிபாஷை சாமானிய மன்று. ஒவ்வொரு சூத்திரத்தின் மகுடமும் உலகில் பொதுவாக வழங்கும் சொற்களேயாம். ஆனால் சூத்திரத்தைப் படித்து அதன் பொருளைச் சிறிது உணர்ந்துழி அம் மகுடமொழி சூத்திரத்தின் உட்பொருட்குப் பொருத்த முடையதா என்னும் சங்கையை எழுப்பித் திகைக்கச் செய்யும். உண்மையை உணர்ந்தோர்க்கு உவகையை ஊட்டும். உலக மாக்களால் நிறை முறை இன்றி வழங்கப்படும் சொற்கள் போலி எனவும் அவைகளின் உட்பொருள் அரிய பெரிய கருத்துக்களை உடையன எனவும் இதனால் நன்று வலியுறுத்தப்படும். வாய்மையே போலியாகத் திகழ்வதால், பற்பல உருவங்களாகக் காணப்படுதலால், "மா" வின் நிறையின் பெட்பு அதுவே ஆதலால், நிறையே ஐகாரம் ஆதலால், "மா + ஐ = மாயை" அதன் வாய்மைப் பெயரே வியாபகம் எனும் போலிக்கும்—கற்பனைக்கும் வழங்கப் படுகின்றது. இதனை அறிய முடியாத எம்போலிய பாமரர்கள் அந்த மாயையின் மயக்கிற் சிக்கி உண்மைப் பொருள் காணமுடியாது தங்களுக்குள் முரண்பட்டுச் சர்ச்சை விளைத்துச் சாதலடைகின்றார்கள். விரிப்பிற் பெருகும். இவ் அரிய பெரிய தெய்விக நூற் பொருள் அமயம் நேர்ந்துழி விரிவுற விளக்கிக் கூறப்படும். சங்க கால நூல்கள் எனக் கூறப்படுவனவற்றுள் இறையனார் களவியலும் மூவடி முப்பது என்னும் இந் நூலுமே அரிய திருமறைகள் எனப் போற்றற்பாலன என்பது வெள்ளிடை.

கல்லாடம் சங்க காலத்து நூலன்று என்பார் பலர். எனினும் இந் நூலில் பெரும்பாலும் வேத உண்மைகள் உயரிய முறையில் கூறப்பட்டு மிளிர்கின்றன. இவையும் பிறவும் அமயம் நேர்ந்துழி எடுத்துக்காட்டி விளக்கப்படும்.

பிற்கால வித்வான்களால் உளுற்றப் பட்டுச் சங்கச் சான்றோர் தலையில் சுமத்தி விடப்பட்ட தனிக் கவிகளும் இவை காரணமாக எழுந்த நிறை முறையில்லாக் கற்பனைக் கதைகளும் சில பல உண்டு. இவற்றின் ஆபாசத் தன்மையும் அமயம் நேரும்போது எடுத்துக் காட்டி உண்மை நிறுவப்படும்.

இதுகாறும் கூறியவைகளால் பண்டைச் சங்கச் சான்றோர் நூல்களெல்லாம் நிறை முறை யமைந்த கற்பனைகளால் அரிய பெரிய உண்மைகளையே உலகியலுக்கும் உண்மை நிலைக்கும் ஏற்றவாறு கூறுவன என்பதும் அவற்றுள்ளே தலை சிறந்து விளங்கா நின்ற மூவடி முப்பது என்னும் தெய்விக நூலின் மாண்பும் ஒருவாறு உணரத் தகும்.

சுபம்.

"வித்தகம்"

வருடசந்தா

முன்பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3–0–0

மலாயா, சிங்கப்பூர், சைகோன் ரூ. 4–0–0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

சுத்தசாதகம் விலை அணு 2.

திருவாசக உண்மை விலை அணு 2.

நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

அறிவிப்பு

கடிதர்களின் அபிப்பிராயங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்.

Sandharam Printing Works, Pondicherry. Le Gérant, R. Nagarattinam